சுருக்கம்

நிர்வாகம் – மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் 6 ஒப்பந்த மருத்துவ அலுவலர்கள் – ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெற நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இ1) துறை

அரசு ஆணை (நிலை ) எண். 317

நாள்: 16.10.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய புரட்டாசி – 30

படிக்கப்பட்டது

1. அரசாணை(நிலை)எண்.143, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30.04.2007.
2. அரசாணை நிலை எண்.106, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20.03.2012
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்.36934/நி1/4/2014, நாள்10.07.2014 மற்றும் 15.09.2014

•••••••••

ஆணை

மருத்துவக் கல்வி இயக்குநர், பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் சிறப்பு பிரிவுகளில் காலியாக உள்ள பேராசிரியர் (Professor/Reader) பணியிடங்களில் 25% பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர்களை வெவ்வேறு தொகுப்பூதியங்களில் நியமிக்க ஆணையிடப்பட்டது எனவும், மேலும், பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அத்தொகுப்பூதியங்கள் ஒரே அளவாக ரூ.70,000/– ஆக உயர்த்தப்பட்டது எனவும் கூறியுள்ளார். அவ்வாறே இணைப்பில் குறிப்பிட்டுள்ள ஆறு மருத்துவர்கள், ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டு, மருத்துவக் கல்வி இயக்கக் கட்டுப்பாட்டிலுள்ள வெவ்வேறு மருத்துவ கல்லூரிகளில் சிறப்பு பிரிவுகளில் பேராசிரியர்களாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

2. இவர்களுக்கு 2013–2014 நிதியாண்டிற்கு ரூ.15,40,000/– மற்றும் 2014–2015 நிதியாண்டிற்கு ரூ.32,90,000/– ஆக மொத்தம் ரூ.48,30,000/– ஒதுக்கீடு செய்யுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. அரசு இக்கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இணைப்பில் உள்ள 6 பேராசிரியர்/உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு 2013 –2014 நிதியாண்டிற்கு ரூ.15,40,000/– மற்றும் 2014–2015 நிதியாண்டிற்கு ரூ.32,90,000/– ஆக மொத்தம் ரூ.48,30,000/– (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் இணைப்பில் உள்ள பணியிடங்களுக்கு எதிரே உள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம், 2014–2015 ஆம் ஆண்டுக்கான திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2013–2014 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்ற பேரவையில் பின்னர் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி இத்தொகையினை பெற்று வழங்கிட, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகையினை 2014–2015 ஆம் ஆண்டிற்கான திருத்திய /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் தவறாது சேர்த்து அரசின் நிதித் துறைக்கு அனுப்பிவைக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்திற்குரிய விளக்கக் குறிப்பினை துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்காக நிதித் (வ.செ.பொ.1/சுகாதாரம்–II) துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.55687/சுகாதாரம்–II/ நாள்:16.10.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1319 (ஆயிரத்து முந்நூற்று பத்தொன்பது)–ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்,
அரசு சிறப்புச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி/ ராஜிவ் காந்தி அரசு
பொது மருத்துவமனை, சென்னை–600 003.
முதல்வர், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம்.
முதல்வர்,வேலூர் மருத்துவக் கல்லூரி, வேலூர்.
முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
மாநில கணக்காயர் சென்னை –18
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –01
சம்பள கணக்கு அலுவலர், மதுரை
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர், சேலம்.
குடிமுறை தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை –9
நகல்
நிதி (சுகாதாரம் II/வ.செ.(பொ.I & II/)த் துறை சென்னை–19
இருப்புக் கோப்பு/உதிரிகள்/இணையதளம் /டேட்டா செல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

<u>ANNEXURE</u>

<u>G.O.(Ms)No.317, Health, dated:16.10.2014.</u>

| S. No. | Name of the Contracted Medical Officer/ Name of the Institution | Head of Account | Amount Required for 2013-2014<br>(Rs.) | Amount Required for 2014-2015<br>(Rs.) | Total<br>(Rs.) |
|---|---|---|---|---|---|
| 1. | Dr.A.P.Annadurai, Professor of Radio Diagnosis, Madras Medical College Chennai. | 2210- Medical and Public Health 05-Medical Education Training and Research 105- Allopathy I Non-Plan- AA - Chennai Medical College, 33 - Payments for Professional and Special Services - 04 Contract Payment D.P.Code 2210-05-105-AA 3342 | 26.09.2013 To 28.02.2014<br>3,50,000/- | Nil | 3,50,000 |
| 2. | Dr.V.Sathyamoorthy, Professor of Forensic Medicine, Madras Medical College Chennai | -Do- | November 2013 to March 2014<br>3,50,000/- | April 2014 to March 2015<br>8,40,000 | 11,90,000 |
| 3. | Dr.M.N.Kamaludeen, Professor of Surgery, Madras Medical College Chennai | -Do- | September 2013 and November 2013 to March 2014<br>4,20,000/- | April 2014 and May 2014<br>1,40,000 | 5,60,000 |
| 4. | Dr.K.Selvaraj, Professor of Forensic Medicine, Vellore Medical College, Vellore. | 2210- Medical and Public Health 05-Medical Education --Training and Research 105- Allopathy I Non-Plan- BI- Vellore Medical College, Vellore, 33-Payments for | October 2013 to March 2014 | April 2014 to March 2015<br>8,40,000 | 12,60,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Professional and Special Services -04 Contract Payment D.P.Code 2210-05-105-BI 3345 | 4,20,000/- | | |
| 5. | Dr.G.Pannerselvam, Professor of Forensic Medicine, Government Mohan Kumaramangalam Medical College, Salem. | 2210- Medical and Public Health 05-Medical Education –Training and Research 105-Allopathy I Non-Plan- BB-Government Mohan Kumaramangalam Medical College, 33-Payments for Professional and Special Services - 04 Contract Payment D.P.Code 2210-05-105-BB-3349 | Nil | May 2014 to March 2015<br>7,70,000 | 7,70,000 |
| 6. | Dr.V.Rajaram, Professor of Anatomy, Madurai Medical College, Madurai | 2210- Medical and Public Health 05-Medical Education –Training and Research 105-Allopathy I Non-Plan- AD - Madurai Medical College, Madurai 33-Payments for Professional and Special Services -04 Contract Payment D.P.Code 2210-05-105-AD - 3346 | Nil | June 2014 to March 2015<br>7,00,000 | 7,00,000 |
| | | Total | **15,40,000** | **32,90,000** | **48,30,000** |

P.SENTHILKUMAR,
SPECIAL SECRETARY TO GOVERNMENT

/TRUE COPY/

SECTION OFFICER